# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2757/விசாரணை/E/2024**

திரு.ஆர்.சம்பத்து -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்
துறை இயக்குநரகம், சென்னை-6. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.02.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை-6, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் அலுவலக நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.எ.ஜெயந்தி 08.05.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 07.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அவரது 28.11.20203 தேதியிட்ட மனு தொடர்பாக, உச்சநீதிமன்ற ஆணைக்குட்பட்ட மனுதாரர்களுக்கு மட்டும் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி முடித்த நாளிலிருந்து முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்ய அரசாணை எண்.543, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை நாள் 29.11.2025-ன்படி ஆணையிடப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட உச்சநீதிமன்ற ஆணை மற்றும் அரசாணையின்படி மனுதாரர் தகுதியுடையவராகிறார் (வழக்கு எண்.10794/2006) என்றும், ஆகவே மனுதாரர் வழக்கு தொடர்ந்த விபரம் மற்றும் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி முடித்த விபரங்களை விழுப்புரம் மாவட்ட சுகாதாதர அலுவலர் மூலமாக வழங்கும்பட்சத்தில் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி முடித்த நாளிலிருந்து பணிவரன்முறைப்படுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தகவல் வழங்கி, அக்கடிதம் மேல்முறையீட்டாளருக்கு 07.05.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 11.05.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2757/விசாரணை/E/2024**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்
துறை இயக்குநரகம், 359 அண்ணா சாலை,
DMS வளாகம், சென்னை-6.

திரு.ஆர்.சம்பத்து
சாவடி தெரு, தண்டரை வழி & அஞ்சல்,
கீழ்பெண்ணாத்தூர் தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம்-606 804.

Copy to: File

RJ/PS 11.5